மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில், குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் மேம்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக் கூறுகளையுடைய நடுத்தர, பெரிய அளவு தொழில்களைக் கண்டறிந்து, அவற்றை மேம்படுத்துவது, மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் (State Industries Promotion Corporation of Tamil Nadu) முக்கிய பணிகளில் ஒன்றாகும். பின்வரும் தொழில்களுக்கான வாய்ப்புக்கூறு அறிக்கைகள் தயாரிப்பது கழகத்தின் ஆய்வில் தற்போது இருந்து வருகிறது:—

(1) கண்ணாடிப் பலகைகள்

(2) சாலிசிலிக் அமிலம்

(3) ரெக்டிபையர்கள்

(4) சர்பிட்டால்

(5) உலோகத் தாள்

(6) பாலிவினைல் அஸிடேட்

(7) மென் தகடுகள்

(8) பொது ஒளி விளக்குகளும், தண்டு விளக்குகளும்

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, நடுத்தரத் தொழில்கள் எப்படிப் பிரிக்கப்படுகின்றன என்பதைப் பற்றி விளக்கம் தர முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறு தொழில்கள் என்று ரூ. 7½ லட்சம் மூலதனம் உள்ளதைப் பிரிக்கிறோம். அதற்கு மேல் அதிமாக முதலீடு போகும்போது, பெரும் அளவுக்கு கோடிக் கணக்கில் போகும்போது, அவைகளை நாம் 'மேஜர் இண்டஸ்டிரீஸ்' என்றும், 'மீடியம் இண்டஸ்டிரீஸ்' என்றும் பிரிக்கிறோம். ஆனால் நம்முடைய விளக்கம் இந்தச் சிறு தொழில்களுக்கு மட்டும் 7½ லட்சம் ரூபாய் என்று விதி வகுத்திருக்கிறோம்.

Calcium Carbide Industry

x 104. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are any proposals under the consideration of the Government to locate any calcium carbide industry in this State; and

(*b*) if so, the details thereof?

1972 ஆகஸ்ட் 19]

காலசியம் கார்பைடு (Calcium Carbide) தொழிற்சாலை.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் கால்சியம் கார்பைடு (Calcium carbide) தொழிற்சாலையை அமைப்பதற்கான செயற் குறிப்புகள் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம். ஆண்டொன்றுக்கு 15,000 டன் கால்சியம் கார்பைட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை அமைக்க இசைவுக் கடிதம் பெற்றுள்ள தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், கால்சியம் கார்பைட் தயாரிப்பதற்கு உகந்த சுண்ணாம்புக் கற்கள் தேவையான அளவு கிடைக்கும் ஓர் இடத்தில் அத்தொழிற்சாலையை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை எந்த இடத்தில் நிறுவப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இதற்கான அனுமதியைப் பெற்ற பின்னரே, இப்போது கால்சியம் கார்பைடுக்கு சந்தை (மார்க்கெட்) இருக்கிறதா என்ற சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஆராய்ந்த பிறகு, இடம் பற்றி முடிவு எடுக்க வேண்டும்.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்குப் பக்கத்தில் இந்தியா சிமின்ட்காரர்கள் கால்சியம் கார்பைடு தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். அது எவ்வளவு உற்பத்தி செய்கிறது, அதற்கு மார்க்கெட் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அவர்களுக்கும் ஒரு எக்ஸ்பேன்ஷன் 'லைசன்ஸ்' கொடுத்திருக்கிறார்கள். அவர்களே அதை நடத்துவதா என்று சந்தேகப்பட்டு, மார்க்கெட் இல்லை என்ற ஒரு கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். ஆகவேதான் நம்முடைய அனுமதி பற்றி மறு பரிசீலனை செய்து வருகின்றோம்.